கவன ஈர்ப்புகள்
(டாக்டர் இரா. நெடுஞ்செழியன்)

தகராறை சென்னை, தொழில் நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு (Industrial Tribunal) விட்டுள்ளது. (அரசு ஆணை எண். 589, நாள் : 13–3–1984). நீதிமன்றத்தின் தீர்ப்பு எதிர்பார்க்கப் படுகிறது.

3. இந்நிலையில் இருதரப்பினரின் விருப்பப்படி நிறுவனத்தை மீண்டும் திறந்து இயக்குவதற்குண்டான சாத்திய கூறுகள் பற்றி ஆணையர் முன்பும் தொழிலாளர் நல அமைச்சர் முன்பும் பேச்சு வார்த்தைகள் நடைபெற்றன. பேச்சுவார்த்தைகளின்போது, நிறுவனத்தை சீராக இயக்குவதற்கு உற்பத்தியை அதிகரித்து சுமார் 200 தொழிலாளர்களுக்கு மேல் ஆட்குறைப்பு செய்ய சங்கம் ஒப்புக்கொள்ள வேண்டுமென்று நிர்வாக தரப்பில் கூறப் பட்டது. சங்கத்தரப்பில், இப்பிரச்சினைகளை நிறுவனம் திறந்த பிறகு பேசிக்கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டது. பேச்சு வார்த்தைகளில் ஒரு இணக்கம் இருதரப்பினர்களிடையே ஏற் படவில்லை. இதன் பிறகு, சங்கம், இந்த நிறுவனத்தின் நிலை பற்றி தெரிவித்து நிறுவனம் நல்ல முறையில் இயங்கக்கூடிய நிலையில் உள்ளதென்றும், அரசால் நியமிக்கக்கூடிய ஒரு திறமை யான நிர்வாகத்தின் கீழ் நிறுவனத்தை ஒப்படைத்து அதை நடத் துவதற்கு ஏற்பாடுகள் செய்யலாமென்றும் தெரிவித்தது. நிறு வனத்தை திறப்பதற்கான சாத்தியக்கூறுகள் பற்றி தொழிலாளர் நல அமைச்சர் மற்றும் தொழில் அமைச்சர் முன்பு நடைபெற்ற பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து தொழிலாளர்துறை ஆணை யர் முன்பு மேற்கொண்டு பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வரு கின்றது. நிறுவனத்தைத் திரும்ப இயக்குவதற்கான சாத்தியக் கூறுகளை தொழில் துறையும் ஆய்ந்து வருகிறது.

4. பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ரூ. 200 உதவித்தொகை வழங்க 2–1–1986 நாளைய அரசு ஆணை எண். 6-ல் உத்தரவு கள் பிறப்பிக்கப்பட்டுள்ளது. உதவித் தொகையை திரும்ப அர சுக்கு செலுத்துவதற்கு அரசு கோரியவாறு நிர்வாகம் உத்திர வாதம் தரவில்லை. இருப்பினும் தொழிலாளர்களுக்கு உதவித் தொகை வழங்குமாறு அரசு உத்தரவிட்டு அதன் அடிப்படை யில் 8–4–1986 அன்று 402 தொழிலாளர்களுக்கும் 16–4–1986 அன்று 50 தொழிலாளர்களுக்கும் உதவித் தொகை வழங்கப் பட்டுள்ளது. மீதமுள்ள தொழிலாளர்களும் இத்தொகையைப் பெற உள்ளனர்.

(7) புதுக்கோட்டை, மச்சிவாடி குடிசைப்பகுதியில் ஏற்பட்ட தீ விபத்து.

திரு. ஜே. முகம்மது கனி: மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, ''புதுக்கோட்டை மாவட்டம், மச்சிவாடியில் 12–4–1986 அன்று 60க்கும் மேற்பட்ட குடிசைகள் தீ விபத்தி னால் எரிந்து போனதால் சுமார் 300 பேர்கள் தங்குவதற்கு இடம் இல்லாமலும், மற்ற நிவாரண உதவிகள் கிடைக்காமலும்

அவதிப்படும் நிலைமை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நிதி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 12-4-1986 அன்று ஏற்பட்ட தீ விபத்தின் காரணமாக பதினாறு குடிசைகளும், ஒரு சிறிய இயந்திரத் தொழிற்சாலையும் சேதமடைந்தன. 16 குடும்பங்களுக்கும் தலா ரூ. 300 வீதம் அரசு அளிக்கும் நிவாரணத் தொகை மொத்தம் ரூ. 4,800 வழங்கப்பட்டிருக்கிறது. அத்துடன் பாதிக்கப்பட்ட 16 குடும்பங்களுக்கும் முறைப்படி, விதி முறைப்படி ஒரு வேட்டி, ஒரு புடவை, 5 கிலோ அரிசி மற்றும் 1 லிட்டர் மண்ணெண்ணெய் ஆகியவை வழங்கப்பட்டன. இத் தீ விபத்தில் உயிர்சேதம் ஏதும் ஏற்படவில்லை. மற்றவைகள் ஆராயப்பட்டு வருகின்றன.

திரு. ஜே. முகம்மது கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த தீ விபத்திற்குக் காரணம் ஒரு தனியார் தொழிற்சாலை என்பதும் அந்தத் தனியார் தொழிற்சாலையை அங்கிருந்து எடுப்பதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன். இங்கே பாதிக்கப்பட்ட ஏழை எளிய மக்களுக்கு தமிழகத்தினுடைய முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து 2 ஆயிரம் ரூபாய் ஒவ்வொரு குடும்பத்திற்கும் வழங்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கிருந்து வந்த புகாரை ஒட்டி நான் முதலில் கூறியது படி நிலைமைகள் ஆராயப்பட்டு வருகின்றன. அதனை ஒட்டி என்ன நடவடிக்கைகள் எடுக்கலாம் என்று அங்கிருந்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மூலமாக வருகின்ற அறிக்கையை பார்த்துத்தான் மேற்கொண்டு நாம் நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும். ஆகவே, தீ விபத்து ஏற்படுமானால் குடிசைகளுக்கு 300 ரூபாய் அளவுக்கும் மற்றும் பல பொருட்களும் சலுகைகளாக தரலாம் என்று விதிமுறைகள் இருக்கின்றன. அந்த விதிமுறைகளின் படி தான் ஏற்கெனவே தரப்பட்டு இருக்கின்றன.

(8) கொடைக்கானலில், தோட்டத் தொழிலாளர்கள் வேலை நீக்கம். செய்யப்படுவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் வேடச்சந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் மற்றும் கே. குப்புசாமி ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு நிதி அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.